**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 15.07.2025** **நேரம் மாலை 6.10 மணி**

**தலைப்புச் செய்திகள்**

இந்திய விண்வெளி வீரர் **சுபான்ஷூ சுக்லா**, விண்வெளி பயணத்தில் இருந்து பத்திரமாக பூமிக்கு திரும்பி இருப்பதை, பிரதமர் திரு நரேந்திர மோடி, பாராட்டி வரவேற்றுள்ளார்.

தூய்மையில் சிறந்த நகரங்களுக்கான **ஸ்வச் சர்வேக்ஷன்** விருதுகளை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் வரும் வியாழக்கிழமை, வழங்கிச் சிறப்பிக்கிறார்.

தூய எரிசக்திக்கு மாறும் முயற்சிகளை, இந்தியா, தேசிய இயக்கமாகவே மேற்கொண்டு வருவதாக, புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், கல்லூரி படிப்பின் எல்லா பாடப் பிரிவுகளிலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

மோடி-சுபான்ஷூ 1 (17)

இந்திய விண்வெளி வீரர் **சுபான்ஷூ சுக்லா**, விண்வெளி பயணத்தில் இருந்து பத்திரமாக பூமிக்கு திரும்பி இருப்பதை, பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். வரலாற்று சிறப்பு மிக்க விண்வெளி பயணத்தில் இருந்து, பூமிக்கு திரும்பி உள்ள **குருப் கேப்டன் சுபான்ஷூ சுக்லா**வை வரவேற்பதில் நாட்டு மக்களுடன் தாமும் இணைந்து கொள்வதாக, அவர் கூறியுள்ளார். சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம் மேற்கொண்ட முதலாவது இந்திய விண்வெளி வீரர் **சுக்லா தான்** என்றும், அவர் தமது துணிச்சல், அர்ப்பணிப்பு மற்றும் முன்னோடி உணர்வுகள் மூலம் கோடிக்கணக்கிலான மக்களுக்கு உணர்வூக்கம் அளித்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்திய விண்வெளி வீரர் ஒருவரை நாமே விண்வெளிக்கு அனுப்புவதற்கான **ககன்யான்** திட்டத்தை நோக்கி முன்னேறுவதில், இது மற்றொரு மைல் கல்லாக அமைந்து இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவிற்கு இது மகத்தான தருணம் என்று, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். இன்றைய தினம், இந்தியாவிற்கு, விண்வெளியில் நிரந்தர இடம் கிடைத்திருப்பதே உண்மை என்றும், அவர் தெரிவித்துள்ளார். சுபான்ஷூ சுக்லா பூமிக்கு திரும்பியது குறித்து கூடுதல் தகவல்கள்…..

**(வாய்ஸ்)**

*மோடி-சுபான்ஷூ* 2 (12)

**(வாய்ஸ்)**

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லாவும், அவருடன் இணைந்து விண்வெளிக்கு சென்ற வேறு 3 விண்வெளி வீரர்களும் திட்டமிட்டபடி, இன்று பிற்பகல் 3 மணியளவில் பத்திரமாக பூமிக்கு திரும்பினர். சர்வதேச விண்வெளி நிலையத்தில இருந்து இவர்களை ஏற்றி வந்த **டிராகன்** விண்கலம், கலிபோர்னியா அருகே பசிபிக் கடல் பகுதியில் இறங்கியதை தொடர்ந்து, அங்கு ஏற்கனவே தயாராக இருந்த அமெரிக்க கடற்படையினர் இவர்களை பத்திரமாக கரைக்கு அழைத்து வந்தனர். சுபான்ஷூ சுக்லா உள்ளிட்ட 4 விண்வெளி வீரர்களும், பூமியின் ஈர்ப்பு விசைக்கு தக்கவாறு உடல் இயக்கத்தை மீண்டும் மாற்றிக் கொள்வதற்கான மறுவாழ்வு பயிற்சிகளில் ஈடுபட உள்ளனர். இதை தொடர்ந்து சுபான்ஷூ சுக்லா, ஆகஸ்ட் 17 ஆம் தேதி புதுடெல்லி வரக்கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

*முர்மு- ஒடிசா* (14)

உலக வல்லரசாக மேம்படுவதே, இந்தியாவின் தேசிய குறிக்கோள் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார். இன்று ஒடிசா மாநிலம் கட்டாக்-கில், **ரேவன்ஷா** பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், உள்கட்டமைப்பு, சுகாதாரம், அறிவியல் – தொழில்நுட்பம், விண்வெளி, செயற்கை நுண்ணறிவு போன்ற பல துறைகளில் இந்தியா தற்போது வெகுவாக முன்னேறி இருப்பதாகவும், 2047 ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், கல்வியின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் கூறினார். மாணவர்கள், **நாட்டிற்கே முதலிடம்** என்பதை வாழ்நாள் முழுவதும் நினைவில் கொண்டு, மிகுந்த பொறுப்புடன் சமூகத்திற்கு சேவையாற்ற தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என குடியரசு தலைவர் வலியுறுத்தினார். படிப்பு முடிக்கும் மாணவர்கள், **வேலை தேடுவோராக அன்றி**, புதுமையான தொழில் முயற்சிகள் மூலம், மற்றவர்களுக்கு **வேலை கொடுப்பவர்**களாக மேம்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

*தூய்மை கணக்கெடுப்பு* (7)

2024-25 ஆம் ஆண்டு **ஸ்வச் சர்வேக்ஷன்** கணக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட, தூய்மையில் சிறந்த நகரங்களுக்கான **ஸ்வச் சர்வேக்ஷன்** விருதுகளை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் வரும் வியாழக்கிழமை நடைபெறும் விழாவில், வழங்கிச் சிறப்பிக்கிறார். மக்கள் தொகை அடிப்படையிலான ஐந்து பிரிவுகளில், மிகவும் சுத்தமான தலா 3 நகரங்களுக்கும், **சூப்பர் ஸ்வச்** பிரிவின் கீழ் வரும் அதி தூய்மையான நகரங்களுக்கும், மொத்தம் 78 விருதுகள் வழங்கப்பட உள்ளன.

*தூய எரிசக்தி 1* (11)

தூய எரிசக்திக்கு மாறுவதில் இந்தியாவின் உறுதிப்பாடு, தேசிய அளவிலான இயக்கமே தவிர, சுற்றுச்சூழல் நோக்கம் மட்டுமே அல்ல என்று, புதிய மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார். தொழில் முனைவோருக்கு மூலதனம் வழங்குவதற்கான, **மாற்று மூலதன சங்கம்** சார்பில், **ஐஐடி – மும்பை** உயர்கல்வி நிறுவனத்தில் இன்று நடைபெற்ற, **புதுப்பிக்க வல்ல எரிசக்தி உச்சி மாநாட்டில்** அவர் பேசுகையில், 2030 ஆம் ஆண்டிற்குள், புதை படிவம் அல்லாத எரிசக்தி மூலமான நாட்டின் மொத்த மின்சார திறனை 500 கிகா வாட்டாக உயர்த்தும் இலக்கை முழுமையாக எட்டுவதில், தனியார் முதலீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் இருப்பதாக கூறினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…..

**(வாய்ஸ்)**

*தூய எரிசக்தி 2* (10)

**(வாய்ஸ்)**

<u>பசுமை எரிசக்திக்கு மாறுவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு, பிரதமரின் சூரிய வீடு போன்ற திட்டங்களும், **சூரிய சக்தி மற்றும் காற்று விசையின் ஒருங்கிணைந்த பயன்பாடு குறித்த** தேசிய கொள்கை போன்ற முன்முயற்சிகளுமே சான்றாகும் என்று அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார். வேளாண் துறையில் சூரியசக்தியின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான **பிரதமரின் குசும் திட்டம்**, குஜராத், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் வெற்றி பெற்றதை தொடர்ந்து, வேறு பல மாநிலங்கள் இத்திட்டம் குறித்து விருப்பம் வெளியிட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையில் **இரண்டாம் கட்ட குசும் திட்டம்** விரைவில் தொடக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.</u>

*மாணவர்-ரங்கசாமி* (11)

புதுச்சேரியில், மருத்துவ கல்வி போல, கல்லூரி படிப்பின் எல்லா பாடப் பிரிவுகளிலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு, நடப்பு கல்வியாண்டு முதலே அமல்படுத்தப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். இன்று காமராஜர் பிறந்த நாளை ஒட்டி, பள்ளி கல்வி இயக்ககம் சார்பில், காமராஜர் மணிமண்டபத்தில் நடைபெற்ற மாணவர் தின விழாவில் அவர் பேசுகையில், பிளஸ் டூ மாணவர்களுக்கு இன்னும் ஒரு மாதத்திற்குள் லேப்டாப் வழங்கப்படும் என்றார். புதுச்சேரி அரசு, கல்வித் துறைக்கு ஆண்டுக்கு ஆயிரத்து 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாகவும், இதில், பள்ளி கல்விக்காக தொள்ளாயிரத்து 50 கோடி ரூபாய் செலவிடப்படுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். முதலமைச்சர் உரையில் இருந்து ஒரு பகுதி…..

**(வாய்ஸ்-ரங்கசாமி)**

*மாணவர்-ரங்கசாமி 2* (8)

மாணவர் தின விழாவில், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் பேசுகையில், புதுச்சேரியில் அரசுப் பள்ளிகள் சிபிஎஸ்இ பள்ளிகளாக மாற்றப்பட்டதை எதிர்கட்சிகள் விமர்சித்த போதிலும், தற்போது இதில் பல பள்ளிகள் 100 சதவிகித தேர்ச்சி விகிதம் காட்டி இருப்பதாக கூறினார். தகுதியுள்ள ஆசிரியர்களை அரசு நியமித்ததும், ஆசிரியர்களின் கடுமையான உழைப்புமே இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்தார்.

விழாவில், சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர் திரு ஜான்குமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

*காமராஜர்* (12)

முன்னதாக, முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு ஜான்குமார், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, அரசு கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ் பி ரமேஷ், திரு நேரு என்கிற குப்புசாமி, திரு லட்சுமிகாந்தன், திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு பிரகாஷ்குமார் ஆகியோர், பட்டாணிக்கடை சந்திப்பில் உள்ள காமராஜர் சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காரைக்காலில், அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், மாவட்ட துணை ஆட்சியர் திரு செந்தில்நாதன், முதன்மை கல்வி அதிகாரி திருமதி விஜய மோகனா,

செய்தி-விளம்பரத் துறை உதவி இயக்குநர் முனைவர் குலசேகரன் உள்ளிட்டோர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வானிலை (14)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் மணிக்கு 50 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த தரைக்காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 21 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், நாளைய தினம், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 17 ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலையில் மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவுதான் என்றாலும், ஒரு சில இடங்களில் வெப்பநிலை சற்று குறையலாம் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை விம்கோ நகர் மண்டலம் மற்றும் மணலி மண்டலத்தில், 8 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

டிஆர்டிஓ (6)

முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவடைத்து தயாரிக்கப்பட்ட, போர் முக்கியத்துவம் வாய்ந்த, 6 முக்கிய தொழில்நுட்ப சாதனங்களை, பாதுகாப்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகம் இன்று இந்திய கடற்படையிடம் ஒப்படைத்துள்ளது. காமா கதிர்கள் மூலம் செயல்படும் வான் கண்காணிப்பு கருவி, சுற்றுச்சூழல் கண்காணிப்பு வாகனம், கதிரியக்க மாசுப்பாட்டை கண்காணிக்கும் வாகனம் ஆகியன இதில் அடங்கும்.

கார்கே (11)

காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மாநிலங்களவை எதிர்கட்சி தலைவருமான திரு மல்லிகார்ஜீன கார்கே இன்று புதுடெல்லியில், மாநிலங்களவை தலைவரும், குடியரசு துணைத் தலைவருமான திரு ஜக்திப் தன்கரை அவரது மாளிகையில் சந்தித்து பேசினார். வரும் 21 ஆம் தேதி தொடங்கும் நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரில், அவையின் அமர்வுகள் பயனுள்ளதாக அமைய வேண்டும் என எதிர்கட்சிகள் விரும்புவதாக பின்னர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில் திரு மல்லிகார்ஜீன

கார்கே கூறினார். முக்கியமான பல்வேறு சமூக-பொருளாதார பிரச்சனைகள், அரசியல் மற்றும் வெளி விவகார பிரச்சனைகள் குறித்த மக்களின் கவலைகளை மழைக்கால கூட்டத் தொடரில் விவாதிக்க வேண்டி இருப்பதாக அவர் தெரிவித்தார்.